14th March 1964]

திரு. மா. இராசாங்கம் : பஞ்சாயத்து யூனியனுக்குத் தர வேண்டிய விகிதாசாரத்தை கூடலூர் பஞ்சாயத்து தர நிதி வசதி இல்லாததால் அவசிய வேலே தடைப்பட்டுப் போய் இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை.

விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட செலவுகள்

* 266 கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல பஞ்சாயத்து யூனியன்களில் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் மலைப்பிரதேசம் என்ற காரணத்தால் செலவழிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) அத்தொகையை விவசாய சம்பந்தமான இனங்களுக்கு மாற்ற உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம், ஐயா.

(இ) இப்பொருள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : எத்தனை பஞ்சாயத்துக்களிலே இம்மாதிரி பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று கூற முடியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : என்னிடம் இருக்கும் தகவல்படி மூன்று பஞ்சாயத்துக்களிலே அப்படி இருக்கிறது. சேலத்தில் ஏற்காடு, கொல்லி மலை, கோயம்புத்தூரில் வால்பாறை

Copies of assignment orders

* 267 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to arrange to communicate the copies of the assignment order to the respective Sub-Registry offices so as to facilitate the public to get loans mortgaging the lands assigned to them, without any difficulty?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

சிமெண்ட்

* 268 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தமிழ் நாட்டிற்கான சிமெண்ட் கோட்டாவை மத்திய அரசாங்கம் குறைத்துள்ளதா ?

(இ) அப்படியானால், எவ்வளவு ?